XSEED FOUNDATION FOR LIFE
idiscoveri

UNLEASH YOUR MIND®

Publication : Nam Dinamathi

Date : Nov 15, 2011

# ஐடிஸ்கவரி எக்ஸீட் 3-வது கருத்தரங்கு

சென்னை,நவ.15-

ஆண்டு தோறும் நடைபெறும் எக்ஸீட் நாளைய பள்ளிகள் 2011 கருத்தரங்கு மூன்றாவது ஆண்டாக நடைபெற்றது.

சிறந்த கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்கள் மூலம் கல்வித்தரத்தை மேம்படுத்த வேண்டியதன் தேவை குறித்து முன்னோடி கல்வியாளர்கள் வலியுறுத்தினர். எல்லை கடந்த கல்வி என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் டெல்லி, சென்னை, மும்பை, ஹைதராபாத் ஆகிய நகரங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 பள்ளி தலைவர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கில் ஐடிஸ்கவரியின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆஷிஷ் ராஸ்பால் பேசியதாவது:

பள்ளிகளில் தரமான கல்வியை போதிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. பள்ளிகளிலிருந்து தரமான மாணவர்களைத்தான் பெற்றோர், முதலாளிகள் மற்றும் அரசும் எதிர்பார்க்கிறார்கள். ஒரு விஷயத்தை ஆழமாகப் புரிந்து விளக்கி கூறும் திறனும், சிறந்த தகவல் தொடர்புத் திறனும் முழுமையான தன்னம்பிக்கையும் கொண்ட மாணவர்கள் உடனடியாக ஈர்க்கிறார்கள். ஆராய்ச்சி நுண்ணறிவு, புதுமையான வழக்காய்வுகள் மற்றும் நடைமுறைத் தீர்வுகளே அதற்கான யோசனைகள் என்பதை நாளைய பள்ளிகள் கருத்தரங்கு நிரூபிக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.